Registered at the G. P. O. as a Newspaper

STAFF COPY

விலை சதம்

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி

மலர் 3 தபாற் பெட்டி எண்: 49

யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 10ஆம் நாள் ஷவ்வால் 5 (23-3-61) வியாழக்கிழமை இதழ் 35

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# உரிமைப்போரில் உயிர் கொடுத்தார்

## திரு. ஏகாம்பரம்

## மூதூர் எம். பி. திடீர் மரணம்

### 'மக்களுக்காகத் தியாகம்செய்த உத்தமர்'

திருக்கோணமலை, வியாழன் மூதூர்த் தொகுதி முதலாவது எம். பி. யும் திருக்கோணமலை நகரசபைத் தலைவருமான திரு. த. ஏகாம்பரம் நேற்றுப் பிற்பகல் 3-45 க்கு திருக்கோணமலையிலுள்ள அவரது இல்லத்தில் மாரடைப்பினால் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



திரு. ஏகாம்பரம் மறைவுக்கு அனுதாபந் தெரிவிக்கும் முகமாக இன்று மாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் அனுதாபக்கூட்டமொன்று நடைபெறும். தமிழரசுக்கட்சியின் சார்பில் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்கு திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. ஏ. கந்தையா, திரு. ரி. சிவசுந்தரம் ஆகியோர் திருக்கோணமலைக்குச் சென்றுள்ளனர்.

சத்தியாக்கிரக இயக்கத்தைக் கவனித்துக்கொண்டிருக்கையில் மார்பில் வலியேற்பட்டதாகவும் வலி கடுமையாகவே திரு. ஏகாம்பரம் வீட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் வலி தோன்றிய சுமார் பதினைந்து நிமிஷங்களில் காலமானதாகவும் தெரிகிறது. திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயம், மூதூர் முன்னாள் எம். பி. ஜனாப் எம். ஈ. எச். முகமதலி ஆகியோர் நேற்றிரவு வெகு நேரம்வரை திரு. ஏகாம்பரத்தின் இல்லத்தில் இருந்தனர்.

திருக்கோணமலை நகர சபையில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக அங்கத்தவராகப் பணியாற்றிய திரு. ஏகாம்பரம் பல வருடங்கள் நகரசபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

சென்ற வருடம் மார்ச்சு மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு முதலாவது எம். பி. யாக வெற்றி பெற்ற திரு. ஏகாம்பரம் ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலிலும் தமிழரசுக்கட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில்

## நகர மேயர் தலைமையில் ஊர்வலம்

### தி. மு. க. தொண்டர்களும் மறியல் செய்தனர்

யாழ்ப்பாணம், வியாழன்
இரண்டு தினங்களாக ஊர்வலம் எதுவும் இல்லாமல் காணப்பட்ட யாழ்ப்பாணத்தில் நகர மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தலைமையில் நேற்று பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் ஊர்வலமாகக் கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கைப் படத்தின் மத்தியிலே தமிழ்த்தாயின் கை கால்களை சங்கிலியினால் பிணைத்து, வாயை கறுத்தச் சீலையினால் கட்டி வரையப்பட்ட படம் காட்சியளித்தது. நூற்றுக்கணக்கான சுலோக அட்டைகள் காட்சியளித்துக் கொண்டிருந்தன.

கொழும்பு, கண்டி, அப்புத்தளை முதலிய இடங்களிலிருந்து இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்த நூறு தொண்டர்கள் கழகத்தின் (ஒரு பிரிவு) பொதுச் செயலாளர் திரு ஏ. இளஞ்செழியன் தலைமையில் நேற்று யாழ்ப்பாணம் கச்சேரி வாசல்களில் மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

நேற்றைய மறியல் இயக்கத்திலும் பெண் தொண்டர்களே பெருந்தொகையினராகக் கலந்துகொண்டனர். வித்தியா கந்தோர் வாசல்களில் நேற்

(6-ம் பக்கம் பார்க்க)

## 'மக்களுக்காக உயிரையும் அர்ப்பணித்தார்'

—திரு. எஸ். ஜே. வி.

## 'வழிகாட்டும் கர்மவீரன் மறைந்துவிட்டார்'

—திரு. அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்
"தமிழ்ப் பேசும் மக்களின் சத்தியாக்கிரக இயக்கத்தில் திரு. ஏகாம்பரத்தின் கடின உழைப்பே அவரின் அகால மரணத்துக்குக் காரணமாகும்" என்று தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் மிகுந்த மன வேதனையுடன் தெரிவித்தார்.

மூதூர் முதலாவது எம். பி. திரு. ஏகாம்பரம் மாரடைப்பினால் திடீரென்று காலமான செய்தி நேற்றுப் பிற்பகல் நாலரை மணியளவில் திரு. செல்வநாயகத்திடம் தெரிவிக்கப்பட்டது. மரணச் செய்தி கேட்டதும் அவர் சில நிமிஷங்கள் பதிலே பேசவில்லை.

திரு. ஏகாம்பரத்தின் மறைவு குறித்து திரு. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்:-

திரு. ஏகாம்பரம் எனது விசுவாசமுள்ள நல்ல நண்பன். எங்கள் கட்சியில் சேர்ந்த நாள் தொடக்கம் அவர், கட்சி இலட்சியங்களுக்கு உண்மையாகவே நடந்து வந்துள்ளார். 1960-ம் ஆண்டு மார்ச், ஜூலை மாதப் பொதுத் தேர்தல்களில் நான் அவருடன் வேலை செய்தேன். மூதூர் தொகுதி வாக்காளர்கள் அவரிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்தனர். இரண்டு பொதுத்தேர்தல்களிலும் அவரைத் தங்களின் முதலாவது எம். பி. யாகத் தெரிவு செய்தனர்.

எங்களின் இன்றைய சத்தியாக்கிரக இயக்கத்தில் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து திரு. ஏகாம்பரம் உழைத்தார். அவரின் கடின

(6 ம் பக்கம் பார்க்க)

## இன்று மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் 14-ம், 15-ம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்கள் இன்று உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரை தலைமையில் மௌன ஊர்வலம் ஒன்று நடத்துவார்கள்.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச்வரதராசப் பெருமாள் கோவிலடியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி கச்சேரி முன் நடைபெறும் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளும்.

---

நியுயோர்க், மார்ச் 22
ஐ. நா. விலுள்ள இலங்கைப் பிரதிநிதி சேர். குளோட் கொரியா சுகவீனம்காரணமாக இராஜதந்திர சேவையிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

இலட்சுமி தோட்டம்

## மீண்டும் கொந்தளிப்பால் தொழிலாளர் சங்கடம்

### எழு பேர் கைது; மூவருக்குப் படுகாயம்

நாவலப்பிட்டி, மார்ச் 21
நாவலப்பிட்டியைச் சேர்ந்த இலட்சுமி தோட்டத்தில் தொழிலாளருக்கும் தோட்டத் துரையின் ஆதரவாளர்கள் என்று கருதப்படும் சிலருக்குமிடையில் சமீபத்தில் ஏற்பட்ட கைகலப்பில் எழுவர் படுகாயமடைந்துள்ளனர்.

தோட்டத்துரையின் ஆதரவாளர்கள் தொழிலாளரை ஏசி பயமுறுத்தியதாகவும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் கத்திகள் பாவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தோட்டத்தில் இதற்கு முன்னரும் கைகலப்புகள் ஏற்பட்டுள்ளன.

(6ம் பக்கம் பார்க்க)

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க ஆதரவில்

மாபெரும் ஊர்வலம்

தமிழ் மொழிக்குச் சட்டபூர்வமான அந்தஸ்து, இராணுவத்தை திருப்பியழைத்தல், உடனடியான உணவுப் பங்கீடு எனும் கோரிக்கைகளை முன்வைத்து 25-3-61 சனிக்கிழமை முற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ஜும்ஆ பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள சங்கக் காரியாலயத்தில் பொதுக்கூட்டமும் தொடர்ந்து மாபெரும் ஊர்வலமும் நடைபெறும்.

ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

Advt. 73

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம்.

### மணிவாக்கு

அன்புதான் கடவுள். அன்புக்கு விரோதமாகச் செய்வது எல்லாம் கடவுளுக்கு விரோதமாகச் செய்வதாகும்.

—இராதா கிருஷ்ணன்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 10 உ (23-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## அரசியல் சிக்சல்

இன்று லண்டனிலிருந்து இலங்கை திரும்பும் பிரதமர் சிறிமாவுக்கு இங்கு மிகவும் சிக்கலான நிலைமை காத்திருக்கின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு மாத காலமாக அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்துள்ளது. வகுப்புவாத எதிரிகள், மீண்டும் விஷமம் செய்து கலகம் மூட்டி அரசாங்கத்தைக் கவிழ்க்கக் காத்திருக்கிறார்கள். பொருளாதார, வேலையில்லாக் கஷ்டங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இதே சமயம் மூன்று இடைத் தேர்தல்களும் அடுத்த வாரம் நடைபெற இருக்கின்றன. பழுத்த அரசியல் ஞானிகளுக்கே இந்நிலையைச் சமாளிப்பது சுலபமன்று. அப்படியிருக்க, அரசியல் அனுபவம் போதாத பிரதமர் சிறிமா மிகமிகக் கவனமாகவும் தீர்க்கதரிசனத்துடனும் காரியங்கள் செய்யாவிடில், அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, நாட்டுக்கும் பல பாதகங்கள் ஏற்பட்டுவிடக்கூடும். இந்த அரசியல் சிக்கலை எப்படித் தீர்க்கலாம் என்பதே கேள்வி.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சியே சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்ததென்றாலும் அது இன்று கட்சிப் போராட்டமாக இல்லாமல், சுமார் 30 லட்சம் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த இயக்கமாகவளர்ந்திருக்கிறது. இப்போதுள்ள அரசியல் அமைப்பு, மொழி உள்ளிட்டுத் தங்கள் அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கவில்லை என்றும், ஆகவே தாங்களும் இந்நாட்டில் சரிசமமாக முதல்தர பிரஜையாக வாழக்கூடியதான ஒரு புதிய அரசியல் திட்டம் வேண்டுமென்பதே அவர்களது உள்ளக்கிடக்கை.

இன்று இலங்கையிலுள்ள சோல்பரி அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து 12 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இக்காலத்திலே, இந்தியாவில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கையில், இலங்கையில் தேச ஒற்றுமை குலைந்து, அரசியல் அமைதி இல்லாமல், பொருளாதார நிலையும் மோசமாகி வந்துள்ளதைப் பார்க்கிறோம். இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அரசியல் அமைப்பு சரியாக இல்லாததென்பதை விளக்கத் தேவையில்லை. ஓர் அரசியல் அமைப்பின் வெற்றிக்கு அடையாளம், நாட்டின் முன்னேற்றம்தான். இலங்கை இன்றுள்ள நிலைமை இந்த சோல்பரி அரசியல் திட்டம் நம் நாட்டுக்கு உகந்ததல்லவென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்த அரசியல் திட்டம் தோற்றுவிட்டதென்பதைச் சிங்கள அரசியல் அறிஞர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இத்திட்டத்துக்குப் பதில் புதியதோர் அரசியல் திட்டத்தை இந்நாட்டிலுள்ள மக்கள் பிரதிநிதிகளும், அரசியல் அனுபவஸ்தர்களும் அறிஞர்களும் சேர்ந்து தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்குமான முறையில் தயாரிக்க வேண்டிய அவசியம் அதிகரித்திருக்கின்றது.

அரசியலைச் சீர்திருத்தி அமைக்க ஓர் அரசியல் கூட்டுக் கமிட்டியை அமைப்பதாக பார்லிமெண்ட் சபைமுதல்வர் அரசாங்க சார்பாக அறிவித்தார். ஏற்கெனவே இல்லாத கமிட்டி அமைக்கப்பட்டு அதன் வேலைகள் உருப்படாமற் போய்விட்டன. மீண்டும் அவ்வித கமிட்டியை நியமிப்பதில் பயனில்லை. இந்தியாவில் செய்தது போல் அரசியல் திட்ட நிர்வாக சபையை விரிந்தமுறையில் அமைத்து, இலங்கை அரசியலை அடியோடு திருத்தி அமைக்க முற்படவேண்டும். இலங்கை குடி அரசாக மாற இருப்பதால், இதைச்சாக்கிட்டு அவ்வித அரசியல் நிர்ணய சபையை நியமிக்கலாம். அது ஒன்றுதான் இன்று நாட்டில் புரை ஏறிப்போயுள்ள அரசியல் வியாதிக்கு சரியான பரிகாரமாகும். இன்று ஏற்பட்டுள்ள சிக்கல்களை, அரசாங்கக் கட்சி தனிப்பட்ட முறையில் தீர்க்கமுடியவே முடியாது. அப்படித் தீர்க்கமுற்பட்டால், அரசியல் எதிரிகள், நிலைமையை மேலும் குழப்பி, அரசாங்கத்துக்கு சமாளிக்க முடியாத நிலையை ஏற்படுத்தி அதைக் கவிழ்த்துவிடவும் காத்திருக்கின்றார்கள்.

# இலங்கைத் தமிழர் துயரம்:

## காமன்வெல்த் பிரதமர்களுக்கு அனுப்பிய கடிதம்

இலங்கை ஜனநாயக சமதர்ம கட்சிக் காரியதரிசி திரு. இரத்தினசபாபதி விஜயேந்திரா, இம்மாதம் 8ந் திகதி லண்டனில் கூடிய காமன்வெல்த் பிரதம மந்திரிகளுக்கு "இலங்கையில் தமிழர் படும் கஷ்டங்கள்" என்ற தலைப்புடன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் கருத்து வருமாறு:-

அன்பார்ந்த ஐயன்மீர்!

காமன்வெல்த் நாடுகளில் ஒன்றான இலங்கையின் பிரஜை என்ற முறையில் இதை தங்களுக்கு எழுதுகிறேன். இச்சமயத்தில் துரதிருஷ்ட இலங்கையிலே ஏற்பட்டுவரும் கொடுமைகளைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

1956 ம் வருடம் முதல் இலங்கையிலே சிறுபான்மை இனத்தவருக்கும் மதத்தவருக்கும் பாதுகாப்பின்றி, அவர்கள் மனமுடைந்திருக்கின்றனர். சிறப்பாக இலங்கையிலுள்ள 30 லட்சம் தமிழரையும் தமிழ் பேசும் மக்களையும் பற்றியே குறிப்பிடுகிறேன்.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நாங்கள் 'ஐக்கிய இலங்கை தேசிய சமுதாயமாக சு'தந்தரம் பெற்றோம். ஆனல் தமிழ்ப் பேசும் மக்களாகிய நாங்கள் மிகவும் சங்கடமான, துன்பமான நிலையில் எங்கள் புராதன நாட்டிலேயே இரண்டாம்பட்ச பிரஜைகளாக வாழுகின்றோம். இலங்கை முதலில் போர்ச்சுகீயருக்கும் பின்னர் ஒல்லாந்தருக்கும் பின்னர் பிரிட்டிஷாருக்கும் அடிமைப்பட்டது. அதற்கு முன் எங்கள் சுதந்தர தமிழ் அரசு வடக்கிலும் கிழக்கிலும் இருந்துவந்தது. சிங்களவருக்கும் மத்திய, தெற்கு இலங்கையில் சுதந்தர அரசாங்கம் இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கைத் தமிழராகிய நாங்களும் சிங்களவரும் இலங்கையில் ஒரே ஐக்கிய பிரிட்டிஷ் நிர்வாகத்துக்கு உட்பட்டோம். தமிழரும் சிங்களவருமாகிய நாங்கள் மேலும் ஐக்கியப்பட்டும் சரிசமமாகவும் நண்பர்களாகவும் வாழ்ந்தோம். எங்கள் தமிழ், சிங்கள மொழிகளுக்கு சம அந்தஸ்து இருந்துவந்தது. எந்த மொழியையும் பயன்படுத்த எங்களுக்குச் சுதந்தரமிருந்தது. ஆங்கிலம் அரசாங்க மொழியாக இருப்பினும் எந்த மொழியையும் பாவிக்கும் உரிமை இருந்தது. சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் எதையும் நாங்கள் உபயோகித்தோம். ஐக்கிய இலங்கை தேசிய சமுதாய மென்ற முறையில் சரிசமமாக மேலான நண்பர்களாக வாழ்ந்தோம்.

ஆனல் இன, சமய சிறுபான்மை வகுப்பினருக்கு அடிப்படை ஜனநாயக மனித மொழிஉரிமைக்கான பாதுகாப்புகள் இன்றைய அரசியல் அமைப்புத் திட்டத்தில் இல்லை. இதனல், 60 லட்சம்பேர்களுள்ள சிங்கள சமூகம் பார்லிமெண்டிலே சிறுபான்மை மக்களின் நல உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சட்டதிட்டங்களை நிறைவேற்றிக்கொண்டே போகிறார்கள். சிறப்பாக 30 லட்சம் பேருள்ள தமிழ் சமூகத்தின் பொருளாதார, கலாசார, நல உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

1956 ம் வருடம் சிங்களம் மட்டும் சட்டம் பலத்த எதிர்ப்பினிடையே நிறைவேறிய பின் நாட்டில் நெருக்கடிகளும் வகுப்புப் பூசல்களும் ஏற்பட்டு 1958 ம் வருடம் பயங்கர கலகங்கள் ஏற்பட்டன. நூற்றுக்கணக்கான ஆண், பெண், குழந்தைகள் மிகக் குரூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களில் பலர் ஒரு பாவமுமறியாத அஹிம்ஸா நிராயுதபாணிகளான தமிழர்களே. அதன்பிறகு, நாட்டிலே, வகுப்புத் துவேஷமும் மனக்கசப்பும் ஏற்பட்டுள்ளது.

இப்போதுள்ள அரசாங்கம் நீதிமன்ற மொழி மசோதாவை பிரதமர் இந்தியா சென்றிருக்கையில், பார்லிமெண்டில் அவசரமாக நிறைவேற்றியபின், நெருக்கடியும், மனக்கசப்பும் அதிகரித்தன. இதனல் இலங்கையில் தமிழரின் சங்கடங்கள் மேலும் அதிகரித்து அவர்களுக்கு புதிய புதிய வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளன. சங்கடம் தாங்கமுடியாதுபோகவே, மனமுடைந்து வேறு வழியின்றி, 30 லட்சம் தமிழ் பேசும் மக்களும் காந்தி காட்டிய அஹிம்சா சத்தியாக்கிரகத்தை சென்ற பிப்ரவரி மாதம் 20ந் திகதி தங்களது பரம்பரைப் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பித்தனர்.

அரசாங்கம் தனது நியாயமற்ற மொழிக் கொள்கையை மாற்றிக் கொள்வதற்குப் பதிலாக இராணுவத்தை, தமிழ் சத்தியாக்கிரகிகளை அடக்கி ஒடுக்குவதற்காக அனுப்பி வைத்துள்ளது. அமைதியான காந்திய சத்தியாக்கிரகிகள் சிலர்மீது நியாயமற்ற முறையில் பலாத்காரத்தை பொலிசாரும், இராணுவத்தினரும் பிரயோகித்துள்ளனர். எளிய ஆனல் கண்யம் வாய்ந்த தமிழ் மக்களிடையே இதனல் அதிக சங்கடங்களும், பட்டினியும், சகிக்கமுடியாத துன்பமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தினசரிப்பத்திரிகைச் செய்திகளும் படங்களும் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளன. இலங்கையிலே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் என்ன நடக்கிறதென்பதை ஓரளவு தெரிந்துகொள்ள அவை உதவலாம்.

பண்பாடும், நாகரீகமும் வாய்ந்த இலங்கைத் தமிழ் மக்கள் இவ்விதம் துன்புறுத்தப்படுகையில், தென்னபிரிக்கா, காங்கோ மீது இலங்கை கண்டனம் தெரிவிப்பது தகாது. இலங்கை முதலில் தங்கள் வீட்டை சரி செய்ய வேண்டும். முதலில் தனது மக்களான தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்க்கவேண்டும். பிறகு காமன்வெல்த் ஐ. நா. சபைகளுக்குச்சென்று முதலைக் கண்ணீர் வடிக்கலாம். இலங்கை அரசாங்கம் மற்றவர் கண்ணிலுள்ள துரும்பைப் பார்க்குமுன் தன் கண்ணிலுள்ள பெரிய உத்தரத்தைப் பார்க்கவேண்டும்.

ஆகவே, காமன்வெல்த் மகாநாட்டில் கூடியுள்ள பிரதம மந்திரிகள், இலங்கைப் பிரதமருக்கும் அவரது அரசாங்கத்துக்கும் நல் யோசனை கூறி, 30 லட்சம் தமிழ் பேசும் மக்களின் உண்மையான சங்கடங்களை கண்யமாக, நியாமாக, சமரசமாகத் தீர்க்கச் செய்ய வேண்டுமென்று தாழ்மையாக வேண்டுகிறேன்".

இக்கடிதத்துடன் 6 படங்களும் 8 பத்திரிகைத் துண்டுகளும் அனுப்பப்பட்டன. பிரிட்டன், இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா, மலாயா, தென்னபிரிக்கா முதலிய நாடுகளின் பிரதம மந்திரிகளுக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

### ஆசிரியருக்குக் கடிதம்

## கலங்கரை விளக்கம்

சென்ற ஒரு மாத காலமாகப் பருத்தித்துறை கலங்கரை விளக்கத்தின் (லைற்ஹவுஸ்) வெளிச்சம் பிரகாசிப்பதில்லை. இதனல் கடல் தொழிலாளர்களின் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிச்சத்தின் உதவியுடன் திசையறிந்து கலங்களைச் செலுத்தி வந்த கடல் தொழிலாளர் இப்போது மிகவும் சிரமப்படுகின்றார்கள்.

ஆகவே, இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து விரைவில் வெளிச்சம் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகும்.

முக்கியமாக, இப்பகுதி மீன்பிடிப் பரிசோதகரும் கௌரவ தொழில் தேசிய சேவைகள் அமைச்சரும் (கரையோர வெளிச்சப்பகுதி) இது விஷயத்தில் கூடிய கவனமெடுக்க வேண்டுகிறோம்.

எஸ். ஆர். யேசுநாதன்
ஏ. அருளானந்தம்
பருத்தித்துறை

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து ஓர் அன்பர் வந்து கச்சேரிமுன் நடைபெறும் சத்தியாக்கிரகத்தைக் கண்டார். வீட்டிலே தும்புக் கட்டையை பிடித்தறியாத செல்வந்தப் பெண்கள், அங்கு ரோட்டிலே கூட்டுவதைக் கண்டதாயும், அங்கு கண்ட காட்சி தமது உள்ளத்தை உருக்கிவிட்டதாயும் கூறினர்.

தினசரி பகல் 12 மணிக்கும் மாலை 6 மணிக்கும் ஒரே சமயத்தில் எல்லாரும் சேர்ந்து பிரார்த்தனை செய்வது மிக நல்ல ஏற்பாடென்றும், இது கிராமங்களெங்கும் பரவ வேண்டுமென்றும் சொன்னர்.

ஒரே சமயத்தில் பல உள்ளங்களிலிருந்து எழும் புனிதமான பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்ப்பது உறுதி என்று நம்பினர் மகாத்மா. கூட்டுப் பிரார்த்தனைகளை ஊருக்கு ஊர் நடத்தியே நாட்டின் விடுதலையைப் பெற்றார். அவர் உப்பு சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல், ஒத்துழையா இயக்கம், சட்ட மறுப்பு முதலியவை நடத்திய போதும்கூட நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கோயிலிலும் குருக்கள்மார் கூட்டுப்பிரார்த்தனைக்கான ஒழுங்குகள் செய்தால் அவர்கள், இச்சமயம் சமூகத்துக்கு மேலான பணி செய்தவர்களாவர்.

* * *

கொழும்பிலே ஏதாவது விசேஷ முண்டா? என்று கேட்டேன். அப்படி விசேஷமொது வுமில்லை என்றும், சிலர் வகுப்புத் துவேஷத்தைக் கிளப்ப முயலுவதாயும், சிலருக்கு எச்சரிக்கைக்கடிதங்கள் "கெமுனுவின் ஆவி" என்ற கையெழுத்துடன் கிடைத்துள்ளதாயும் தெரிவித்தார்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உங்கள் தலைவர்களை சத்தியாக்கிரகத்தைக்கை விடும்படி கேட்குமாறு உங்களுக்குப் பலமாக எச்சரிக்கை செய்கிறோம். இல்லாவிட்டால், 1958-ம் வருடம் எவ்வித அவசரநெருக்கடி ஏற்பட்டதோ அதைவிட மோசமானதான ஒரு நெருக்கடி ஏற்பட்டுவிடும்" என்று அதில் குறிப்பிட்டுள்ளதாகச் சொன்னர்.

இவ்விதம் கிடைத்த ஒரு கடிதம் ரகசியப் பொலிசாரிடம் ஒப்புவிக்கப்பட்டதாம்.

கொழும்பில் சிற்சில இடங்களில் சிலர் துவேஷ சுவரொட்டிகளை ஒட்டியதாயும், பொலிசார் அவர்கள்மீது உடன் நடவடிக்கை எடுத்ததாயும் தெரிகிறது. பொலிஸார் தங்கள் கடமையை சரிவரச் செய்தால், இந்த விஷமங்கள் தலைதூக்காது. முன் தடவை போலில்லாமல், இப்போது பொலிசார் அதிக கண்டிப்பாக இருப்பதாகத் தெரிகிறது.

* * *

பிறக்கும் தமிழ்ப் புதுவருடத்திலே மொத்தம் எட்டுக் கிரகங்கள் ஒரே ராசியில் கூடுவதாயும், அது உலகுக்கே பெரிய கேடு என்றும் ஓர் அன்பர் பயமுறுத்தினர். புதுவருட வாக்கிய பஞ்சாங்கத்தைப் பார்த்தேன்.

தைமாதம் 9-ந் திகதி முதல் 28-ந் திகதிவரை சூரியன் செய்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, கேது ஆகிய கிரகங்களும், தை 21 முதல் 23 வரை எட்டு கிரகங்களும் மகராசியில்கூடி நிற்பதாயும், அக்காலத்திலும், பின்சிலமாதங்களிலும், பல அபாயங்களும், தேசவிரோதமும், வெள்ளம் முதலியனவும் உண்டாகுமென்றும், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் மேற்படி கெடுகள் குறைவாகவே காணப்படுமென்றும் குறிப்பிட்டிருந்தது. நல்லவேளை நம் இலங்கைக்கு அதிகெடுதல் இல்லை. கெடுதல் வருவதானலும் நமக்கு என்னபயம்?

"நாளென் செயும், வினைதான் என்செய்யும் எனைநாடிவந்த கோள் என் செயும், கொடுங் கூற்று என்செயும்" என்ற பாடலும் "கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே" என்ற தேவாரமும் எனக்கு ஞாபகம் வருகிறது.

# ஹமர்ஷீல்டை நீக்க மீண்டும் வற்புறுத்து

## ரஷ்யப் பிரதிநிதி பிரேரணை

நியுயோர்க் மார்ச் 22

ஐ. நா. பிரதம காரியதரிசி திரு. ஹமர்ஷில்டைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று ஐ. நா. விலுள்ள ரஷ்யப் பிரதிநிதி குரோமிக்கோவ் நேற்று ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் மீண்டும் வற்புறுத்தினர். ஹமர்ஷில்டை பிரதமக் காரியதரிசியாக ரஷ்யா மதிக்கவில்லையென்றும், தொடர்புகள் யாவற்றையும் துண்டித்துக் கொண்டுவிட்டதாகவும் திரு. குரோமிக்கோவ் தெரிவித்தார்.

ஹமர்ஷீல்ட்டைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்ற பூர்வாங்க தீர்மானமொன்றை அவர் சபையில் சமர்ப்பித்துப் பேசுகையில் காங்கோவில் பெல்ஜியம் தலையிட்டதனால் தான் அங்கு நெருக்கடிகள் ஏற்பட்டதென மகாசபை அறிவிக்கவேண்டுமென்றார்.

மேஜர் மொபுட்டுவையும், கட்டாங்கா அதிபர் ஷோம்பேயையும் கைது செய்து கண்டிக்க வேண்டுமென்றும், கிஸங்காவின் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

காங்கோவில் ஐ. நா. தனது நடவடிக்கைகளை விரைவில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று குரோமிக்கோவ் வற்புறுத்தினர்.

அமெரிக்கப் பிரதிநிதி மகா சபையில் பேசுகையில் ரஷ்யப் பிரதிநிதியின் பேச்சு மகா மோசமான பிரசாரமாகும் என்று கண்டித்தார்.

### ஏக தலைவராக முயற்சிக்கிறார்

#### நிக்ருமா மீது கண்டனம்

நியுயோர்க் மார்ச் 22

கானா ஜனாதிபதி நிக்ருமா காங்கோ சம்பந்தமாக தப்பான கருத்துக்களை வெளியிடுகிறார் எனவும் ஆபிரிக்காவின் ஏக தலைவராவதற்காக முயற்சிக்கிறார் எனவும் ஜனாதிபதி கஸவுபுவால் பிரதமராக நியமிக்கப்பட்ட இலியோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

### அமெரிக்க விமானம் மீண்டும் அத்துமீறிப் பறந்ததாம்

#### ரஷ்யா குற்றச்சாட்டு

நியுயோர்க் மார்ச் 22

அமெரிக்க விமானமொன்று ரஷ்ய எல்லைக்குள் மீண்டும் அத்துமீறிப் பறந்ததாக ரஷ்யா குற்றஞ்சாட்டியிருக்கிறது. கெனடி ஜனாதிபதியானபிறகு இச்சம்பவம் நடந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அப்படியான சம்பவம் எதுவும் நடந்திருப்பதாக நம்பவில்லையென அமெரிக்கா பதிலளித்துள்ளது.

### சத்தியாக்கிரகச் செய்திகள்

மட்டக்களப்பு

மட்டுநகர் பிராமணசமாஜத்தினர் ஊர்வலமாக சென்று மட்டக்களப்பு கச்சேரியில் சத்தியாக்கிரகம் செய்வோருக்கு வீபூதி பிரசாதம் வழங்கினர். எம். பி. இராசதுரையிடம் பணமுடிப்பொன்றையும் வழங்கினர்.

∴ ∴ ∴

கல்லடி உப்போடை

இங்கு நடந்த ஒரு சைக்கிள் ஊர்வலத்தில் சுமார் 300 சைக்கிள்கள் இடம் பெற்றன. காலஞ்சென்ற தலைவர் திரு. வன்னியசிங்கத்தின் உருவப் படத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள்.

∴ ∴ ∴

அனலைதீவு தமிழ்பாதுகாப்பு முன்னணியின் சார்பில் 150 தொண்டர்கள் 17-ம் திகதி சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

∴ ∴ ∴

அனலைதீவு தமிழ்பாதுகாப்பு முன்னணியின் சார்பில் சத்தியாக்கிரக நிதிக்கு ரூ 1001 வழங்கப்பட்டது.

∴ ∴ ∴

## புரியாத மொழியில் ரயில்வே வாரண்டுகள்

## தமிழ் சிப்பந்திகள் சங்கடம்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படும் ரயில்வே 'வாறன்டுகள்' யாவும சிங்களத்தில்எழுதப்படுவதால் அதைப் பெற்றுக்கொள்ளுகிற தமிழர்களுக்கு பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் சுமார் 3000 ரயில்வே 'வாறன்டுகள்' சிங்களத்தில் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்படும் 'வாறன்டுகள்' தனிச்சிங்களத்தில் மாத்திரம் எழுதப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருவதற்காக வழங்கப்படும் 'வாறன்டு'களில் சிங்களத்துடன் ஆங்கிலத்திலும் விபரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

சிங்களத்தில் மாத்திரம் 'வாறன்டுகள்' வழங்கப்பட்டு வருவதால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் உத்தியோகஸ்தர்கள் கஷ்டமடைய வேண்டியிருக்கிறது இதனுல் பிரயாணச் சீட்டுகள் வழங்குவதிலும் தாமதம் ஏற்பட்டு வருகிறதாக புகார்செய்யப்பட்டிருக்கிறது.

---

பூநகரி கிராமச்சங்கம் சத்தியாக்கிரகிகள் பொலிசாரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறும்படியும் அத்தீர்மானத்தில் கோரப்பட்டிருக்கிறது.

## "சத்தியாக்கிரக இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும்"

### தி. மு. க. பிரமுகர் நம்பிக்கை

புசல்லாவ, செவ்வாய்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் புசல்லாவ மாவட்ட மகாநாட்டை ஆரம்பித்து வைத்து திரு. எம். ஏ. வேலழகன் பேசுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களி நடைபெறும் சத்தியாக்கிரகம் நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார். மகாநாடு திரு. எம். ஏ. செல்லமுத்து தலைமையில் நடைபெற்றது. கழகக் கொடியை திரு. கே. எம். சிவலிங்கம் ஏற்றிவைத்தார்.

மகாநாட்டு தலைவர் திரு. செல்லமுத்து பேசுகையில் தமிழ் மக்கள் தங்கள் ஜீவாதார உரிமைகளுக்காக நடைபெறும் போராட்டங்களில் கலந்துகொண்டு அவை வெற்றி பெறுவதற்கு ஒற்றுமையுடன் ஆதரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மகளிர் மன்ற தலைவி திருமதி வசந்தா அப்பாத்துரை பேசுகையில், கட்சி வேறுபாடுகளை மறந்து தமிழ் உரிமைப்போர் வெற்றி பெறுவதற்கு தமிழர் ஒன்றுபடவேண்டுமென்றார்.

திரு. ஜே. எஸ். சுந்தரம் பேசுகையில், மலைநாட்டுத் தமிழர் தமது உடல், பொருள் ஆவி அனைத்தையும் தமிழ் உரிமைக்காகத்தியாகம் செய்ய முன்வரவேண்டுமென்றார். செயலாளர் திரு. ஏ. இளஞ்செழியன் பேசுகையில், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறித்த எந்த அரசாங்கமும் நீடித்து பதவியில் இருந்ததில்லையென்றார். தமிழ் உரிமைப்போராட்டம் வெற்றி பெறுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலான உதவிகளைச் செய்யும் என்று அவர் குறிப்பிட்டார்.

திருவாளர்கள்: குறட் செல்வன் குமாரசாமி, காகொல்லை கந்தையா, எம். வி. மோகன், செயலாளர் கு. கருப்பையா, விளம்பரசெயலாளர் அருணசலம், வ. கு. செயலாளர்கள் எம். காளியப்பன், எம். ஆர். செல்லத்துரை மற்றும் பலர் பேசினர்.

### பிரதமர் இன்று வருகிறார்

கொழும்பு, மார்ச் 23

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இன்று இலங்கை வருகிறார். அவரை விமான நிலையத்தில் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலகாவும் தற்காலிக அரசாங்கத் தலைவர் திரு. சி. பி. டி. சில்வாவும் வரவேற்பார்கள்.

### புயலில் 180 பேர் மாண்டனர்

புதுடில்லி மார்ச் 22

கிழக்குப் பாகிஸ்தானிலே சமீபத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக 180 பேர் கொலையுண்டனர் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. சில இடங்களில் மக்கள் ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டனர் என்றும், ஆயிரத்துக்குமதிகமான வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 'கைதிகள் போல் நடத்தப்படுகிறார்கள்'

### தென் ஆபிரிக்க இந்தியர் பற்றி ஐ. நா. வில் புகார்

நியுயோர்க் மார்ச் 22

ஐ. நா. விசேஷ அரசியல் கமிட்டி தென்னுபிரிக்காவிலுள்ள இந்தியர் பாகிஸ்தானியர் நிலைமை குறித்து நேற்று விவாதிக்க ஆரம்பித்தது. இந்தியப் பிரதிநிதி திரு. சி. எஸ். ஷா பேசுகையில், தென்னுபிரிக்காவில், சுதேசிகளைப் போலவே இந்தியர்களும் நடத்தப்படுகிறார்கள் என்றும், அங்கு பெரும்பான்மையான மக்கள் சிறைக் கூடத்திலிருப்பது போல் வாழ்கிறார்கள் என்றும் கூறினர்.

தென்னுபிரிக்காவிலுள்ள மக்களின் விடுதலைக்காக இந்தியா தன்னலானதைச் செய்யும் என்று ஷா தெரிவித்தார். தென்னுபிரிக்காவின் அக்கிரமச் செயல்களைப் பார்த்துக் கொண்டு ஐ. நா. வாளாவிருக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பாரதப் பிரதமர் டில்லி திரும்பினர்

புதுடில்லி, மார்ச் 22

பாரதப் பிரதமர் நேரு லண்டனில் நடந்த காமன்வெல்த் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டபின் கடந்த இரவு ஒரு மணிக்கு பாரதம் வந்து சேர்ந்தார்.

பாலம் விமான நிலையத்தில் அந்த இரவிலும்கூட ஏராளமான மக்கள் பிரதமரை வரவேற்கக் காத்திருந்தார்கள்.

பிரதமர் நேரு பாரதம் வரும் வழியில் கெய்ரோவில் தங்கி ஜனாதிபதி நாஸருடன் சர்வதேச நிலைமைகள் குறித்து விவாதித்தார்.

### பிலவ வருட வாக்கிய பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவில் திரு. இ. சி. இரகுநாதையரால் கணிக்கப்பெற்ற பிலவ வருட வாக்கிய பஞ்சாங்கம் வரப் பெற்றோம். 293 வருடங்களாக, தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் புகழ்பெற்ற இவ்வாக்கிய பஞ்சாங்கத்தில் வழக்கம் போல், பஞ்சாங்க விவரங்கள் மட்டுமன்றி ஆஸ்திக மக்களுக்குப் பயன்படுவதான பல சோதிட விஷயங்களும், நல்ல நாட்கள், உற்சவாதிகள் முதலிய பல விஷயங்களும் அடங்கியுள்ளன. 100 பக்கங்களுக்கு மேலடங்கியுள்ள இந்தப் பஞ்சாங்கத்தின் விலை ரூ. 1-50. கிடைக்குமிடம், சோதிட பரிபாலன மடம், கொக்குவில் போஸ்ட். இலங்கை.

### பிலவ வருஷ திருக்கணிதபஞ்சாங்கம் (1961 – 62)

யாழ்ப்பாணம், மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர் F.R.A.S. அவர்களால் கணிக்கப்பெற்ற பிலவ வருட திருக்கணித பஞ்சாங்கம் வழக்கம்போல் சகல அம்சங்களுடனும் அழகாக வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வருடப் பஞ்சாங்கத்தில் 'அஷ்டக்கிரககூடம்' என்ற பகுதியிலே எட்டுக் கிரகங்கள் ஒரு இராசியிற் கூடுவதுபற்றியும், அவ்வாறு கூடுவதால் ஏற்படும் பலன்கள் பற்றியும் விளக்கம் தரப்பெற்றிருக்கின்றது. கிடைக்குமிடம்: சி. சுப்பிரமணியஐயர் "தில்லைவாசம்" மட்டுவில், சாவகச்சேரி. விலை ரூ. 1-25.

'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

**உங்கள் நோய்**

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனாம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

Advt. 58


# “தமிழர் அடிமைகளாக வாழமாட்டார்கள்”

## மட்டக்களப்பு எம். பி. அறிக்கை

வாழைச்சேனை, திங்கள்

“தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல் உரிமைகளை இழந்து இந்நாட்டில் ஒரு போதும் அடிமையாக வாழமாட்டார்கள். இந்நாட்டின் சரித்திர காலத்துக்கு முன்பிருந்து பழம் பெரும் சமுதாயமாக வாழும் தமிழினம், இழந்து போன தமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காகவே இன்று நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்று மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரைஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கை தெரிவிப்பதாவது: ‘தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் பறித்து இந்த நாட்டில் எந்த அரசாங்கமும் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியாது. இந்நாட்டு மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதியினரான முப்பது லட்சம் தமிழ் பேசும் மக்களின் அதிருப்தியை அரசாங்கம் சம்பாதித்துக்கொண்டிருக்கும்வரையில் இந்நாட்டின் தேசிய பொருளாதாரம் ஒரு போதும் அபிவிருத்தி அடைய முடியாது. உலகில் வாழும் எந்த ஒரு இனமும் தாம் வாழும் இடத்தையும் இழந்து, தாம் பேசும் மொழியையும் பறிகொடுத்து அடிமையாக வாழ விரும்பாது. இலங்கைத் தமிழினம் அதற்கு விதிவிலக்காக இருக்கவேண்டும் என்று இந்நாட்டின் பெரும்பான்மை அரசியல்வாதிகள் நினைப்பது கேலிக்கிடமானது. இந்நாட்டில் கடைசித் தமிழ் மகன் ஒருவன் இருக்கும் வரை தன்னையும் தன் இனத்தையும் அடிமையாக்கும் சட்டத்தை எதிர்த்துக் கொண்டு தான் இருப்பான் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.”

# ‘மொழிச் சட்டத்தையே எதிர்க்கிறோம்

## சிங்கள மக்களை அல்ல’ —எஸ். எம். இராசமாணிக்கம்

வாழைச்சேனை மார்ச் 21

“நாங்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல, சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராகவே எமது போராட்டம் நடைபெறுகிறது.” இவ்வாறு பட்டிருப்பு எம். பி.யும், தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் இங்கு கூறினார்.

சந்திவெளியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. இராசமாணிக்கம் பேசினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

“சத்தியாக்கிரகத்தின் மூலம் எதைச் சாதிக்கப் போகிறீர்கள் என்று சிலர் கேட்கிறார்கள். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் செயல்படவில்லையென்று பிரதம மந்திரி சொல்லும் அளவுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்கள் ஸ்தம்பிக்கச் செய்தோம். இதுவரை காலமும் வெளியிலிருந்த முஸ்லிம் மக்கள், சிங்களம் மட்டும் சட்டம் தமிழரை மட்டுமன்றித் தங்களையும்தான் பாதிக்கிறது என்பதை இப்பொழுது உணர்ந்து உள்ளார்கள். ஒரு மாத சத்தியாக்கிரகத்தின் மூலம் இவ்வளவு வெற்றி கிடைத்திருக்கும் போது, தொடர்ந்து நடைபெற்றால் முழு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்பதில் சந்தேகமே இல்லை.

“அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் எமது பிரதிநிதிகள் அப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்கள், ஆனால் சத்தியாக்கிரகம் கைவிடப்படமாட்டாது.”

மட்டக்களப்பு முதல் எம்.பி. திரு. இராசதுரை பேசுகையில், டொனமூர் திட்டம், சோல்பரித் திட்டம், கொடி பிரச்சினை, பிரஜாவுரிமைப் பிரச்சினை ஆகியவை குறித்து தமிழர் முதலிற் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். பின்னர் பணிந்துவிட்டார்கள். அதுபோலவே சிங்களம் மட்டும் சட்டத்தை முதலில் எதிர்ப்பார்கள் பின்பு பணிந்துவிடுவார்கள் என்று அரசாங்கமும் அதைச் சேர்ந்தவர்களும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அந்தச் சட்டத்தை ஏற்று அடிமையாக வாழ்வதைவிடத் தமிழன் மடிந்து போகத் தயாராய் இருக்கிறான் என்பதை அறிவிக்க விரும்புகிறேன்’ என்றார்.

### சுழிபுரம் பறாளாய் முருகன் கோவில்

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவஷண்முகப்பெருமான் கோவிலில் சென்ற17-ம் திகதிதொடக்கம் இலட்சார்ச்சனை சிறப்பாக நடைபெற்றது. தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பல கிராமங்களிலும் இருந்து வந்து சுவாமி தரிசனம் செய்தார்கள்.

### கலைஞர்கள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், வியாழன்

சைவப்பிரகாச வித்தியாசாலை கோவில் மண்டபத்திலிருந்து கலைஞர்கள் ஊர்வலம் ஒன்று 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமாகி கச்சேரிக்குசெல்லும். கலைஞர்கள் சத்தியாக்கிரகத்திலும் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


## நான் விரும்புவது

# நெஸ்டோமோல்ட்

ஏனெனில்,
அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

# நெஸில்ஸ்

**இலவச சாம்பிள்**

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்,
த. பெ. 189 கொழும்பு.

ஒவ்வொருவரும் விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபாரநன்மை அளிக்க வல்லது. சூடானாலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானாலென்ன இழந்த சக்தியை மீட்டுத் தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.

ஆசிரியர்கள் இடமாற்ற விதி முறை-3

# பயிற்சிக்கல்லூரிகளிலிருந்து வெளியேறும் ஆசிரியருக்கான இடமாற்றத் திட்டம்

[22-3-61 இதழின் தொடர்ச்சி]

**அகில இலங்கை ஆசிரியர் சங்கம், சிங்கள ஜாதிககுரு சங்கமய, அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், அடங்கிய கூட்டுச்சபை இடமாற்றம்பற்றிப் செய்துள்ள சிபார்சுகளின இறுதிப்பகுதிஇது.**

ஒருகுறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து 'கோட்டா' முறையில் பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவுசெய்யப்படும் ஆசிரியர், அந்த மாவட்டம் பொதுவாக எல்லாராலும் விரும்பப்படும் ஒன்ருக இல்லாதபட்சத்தில், இடமாற்றம்பெறத் தகுதியுடையவராக மாட்டார். உதாரணமாக, இரண்டாண்டுகளுக்கு முன் ஊவாமாகாணத்திலிருந்து பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட நூற்றிஇருபத்திரண்டு பேரும் ஊவாவிலேயே மாவட்ட ஆசிரியர்களாக கடமையாற்ற வேண்டும். எவராலும் விரும்பப்படாத, அல்லது குறைந்த வசதிகளுள்ள மாவட்டத்தை சொந்த ஊராக்கிக்கொண்ட ஒருவர் அந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ருல் அந்த மாவட்டத்திலேயே மாவட்ட ஆசிரியராகக் கடமையாற்றுவார். எல்லாராலும் விரும்பப்படாத ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் விண்ணப்பம் செய்வதின் மூலம் அந்த மாவட்ட ஆசிரியராகலாம். இதனல் சாதாரண நிலையிலுள்ள 11 மாவட்டங்களிலும் ஆசிரியர்களின் தேவை பூர்த்தியாகும். எல்லாராலும் விரும்பப்படாத அல்லது, கஷ்டமான பகுதிகளில் சேவைபுரியும் ஆசிரியர்கள் தமது சொந்த மாவட்டங்களில் சேவைபுரிவதற்குவசதியும் ஏற்படும்.

சாதாரண, அல்லது, மோசமான மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பயிற்சிப்பள்ளிக் கூடத்திலிருந்து வெளியேறியதும்,அந்தப்பகுதிகளுக்கேமாவட்ட ஆசிரியர்களாக கடமையாற்ற அனுப்பப்படல் வேண்டும். எல்லாராலும் விரும்பப்படும் பகுதிகளை சேர்ந்தவர்களானல் கடினமான பகுதிகளில் இரண்டாண்டுகள் சேவைபுரிய அனுப்பப்படல்வேண்டும்.

விசேஷ பாடங்களில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், அந்தப் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய உபகரணங்கள் உள்ள பாடசாலைகளிலேயே நியமனம் பெறவேண்டும். விசேஷபாடங்களில் பயிற்சியுடைய ஆசிரியர்களின் இடமாற்றம், மாவட்ட அடிப்படையிலன்றி முழுநாட்டையும் அடிப்படையாகக் கொண்டு நடைபெறவேண்டும்.

பிராசீன பண்டிதர், இண்டர் பரீட்சையிற்சித்தியடைந்த ஆசிரியர்,மற்றும் பட்டதாரிகள், விசேஷ தகுதிபெற்றஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளுக்கே நியமிக்கப்படல் வேண்டும். விசேஷ தகுதியுடைய ஆசிரியர்களைப் போலவே இவர்களும் இடமாற்றம்பெற வேண்டும். தலைமை ஆசிரியர்களும், உதவி தலைமை ஆசிரியர்களும் விசேஷ தகுதிபெற்ற ஆசிரியர்களைப் போல் இடமாற்றம்பெற வேண்டும். தற்காலிக தலைமை ஆசிரியர் ஒருவரின்கீழ் இயங்கும் பாடசாலைக்கு, தலைமை ஆசிரியர் நியமிக்கப்படும்போது,அதற்காக விண்ணப்பித்திருக்கும் தலைமை ஆசிரியர்களில் கூடிய தகுதிஉடையவருக்கே அந்த இடம் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் இடமாற்றத்துக்கான இத்திட்டம், பொதுவாக நாட்டின் கல்விக்கும், வித்தியாபகுதியின் நிர்வாகத்துக்கும், ஆசிரியர்களுக்கும், நன்மை விளைவிப்பதாகவிருக்கும். இடமாற்றங்களினல் ஏற்படும் செலவுகளை இது வெகுவாகக் குறைத்துவிடும். ஆசிரியர்களுக்கு இதனல் இடையூறுகள் இருக்காது.

முஸ்லிம் பாடசாலைகளிலும் மேற்கூறிய முறையில் முழுநாட்டையும் அடிப்படையாகக் கொண்டு இடமாற்றங்கள் நடைபெறலாம்இதேகொள்கை தமிழ்ப்பாடசாலைகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கப்படலாம்.

இடமாற்ற சபையின் தீர்மானத்துக்கிணங்க எல்லா இடமாற்றங்களும் நடைபெற வேண்டும். இடமாற்றசபையில் தொழிற்சங்கபிரதிநிதிகள் இருவரும், கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் மூவரும் இருக்கவேண்டும். மாவட்டங்களுக்குள் இடம் பெறும் இடமாற்றங்களுக்கென மாகாண ரீதியில் இடமாற்ற சபைகள் இருக்கவேண்டும். பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக எழுத்துமூலம் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் இடமாற்ற சபைகளால் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படல்வேண்டும்.

கஷ்டமான பகுதிகளில் ஆசிரியர்கள் சேவைபுரிவதற்கு ஊக்கமளிக்கும்வகையில்விசேஷ செலவுப்படி வழங்கவேண்டும்.இதுசாத்தியமில்லையெனில் அப்பகுதிகளில் அவர்கள் தங்கி சேவைபுரிவதற்காக முடிக்தரிய காணிகளில் இரண்டேக்கர் நிலம் வழங்கவேண்டும்.

கூடின பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மத்திய பாடசாலைகளின் விடுதிகளில் இலவசவசதிகள் அளிக்க வேண்டும். தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் வகையில் தொழிற்சங்க உத்தியோகஸ்தர்களான ஆசிரியர்களின் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டும்.

ஒருமாத அறிவித்தலின்றி ஒரு ஆசிரியர் இடமாற்றப்படக் கூடாது. மேற்குறிப்பிட்ட திட்டத்திற்குப் புறம்பான காரணங்களைச்சமர்ப்பித்து கோரப்படும் இடமாற்றங்கள் குறித்து ஆசிரியர் சங்கங்களின் அபிப்பிராயத்தை அறிய வேண்டியது கட்டாயமாக்கப்படவேண்டும்.

(முற்றும்)

## யாழ்ப்பாணத்தில் வதியும் சிங்களவர் பற்றிய விபரம்

யாழ்ப்பாணம்,செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிங்களவர்களின் தொகையும், அவர்களின்பெயர் விலாசங்களையும் இராணுவத்தினர் சேகரித்துவருவதாகத் தெரிகிறது. சிங்களவர்கள் இங்கு வசிப்பதற்குப் பயப்படுகின்ருர்களா? என்பதைத் தெரிந்துகொள்வதுடன் தகுந்த பாதுகாப்பான இடங்களில் அவர்களை அனுப்பி வைக்கவும் ஆயத்தமாயிருப்பதாகத் தெரிவித்திருக்கிருர்களாம். சாவகச்சேரிப் பகுதியில் சிங்கள அன்பர்கள் குளிர்பானங்களைச் சத்தியாக்கிரகிகளுக்கு வழங்கினர்கள்.

## இலங்கை வங்கி ஊழியர் கூட்டம்

### கொழும்பில் நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை வங்கி ஊழியர் சங்கம் வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்தவிருக்கிறது.

சம்பள உயர்வு, பென்ஷன் பெறுகிறவர்களுக்கு அரசாங்க விகிதப்படி செலவுப்படி தொழிற் சங்க நடவடிக்கைகளில் இறங்கியதற்காக சங்க உறுப்பினர் பழிவாங்கப்படுவது, ஆகிய முக்கிய மூன்று விஷயங்கள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

இந்தப் பிரச்சினைகளை சமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியாத பட்சத்தில் வேலைநிறுத்தத்தில் இறங்குவது பற்றியும் இக்கூட்டத்தில் முடிவொன்று செய்யப்படுமெனத் தெரியவருகிறது. இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தில் 6000 அங்கத்தினர் உளர்.

## அங்கோலாவில் போர்த்துக்கேயருக்கு ஆயுதங்கள்

நியுயோர்க், புதன்

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள அங்கோலாவில் வசிக்கும் போர்த்துக்கீசர் பிரஜைகளுக்கு அதிகாரிகள் ஆயுதங்கள் வழங்கியுள்ளனர். சமீபத்தில் அங்கு கலகங்கள் நடந்ததையொட்டி இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

நியுயோர்க் மார்ச் 22

காங்கோ தேசிய இராணுவத்தை அரசியலிலிருந்து விலக்கி வைக்க வேண்டுமென்று காங்கோவில் ஐ. நா.வின் விசேஷப் பிரதிநிதியான ராஜேஸ்வர தயாள் நியுயோர்க்கில் தெரிவித்தார்.


இன்பகரமான 3-வது வாரம்!

பார்த்துப் பயன் அடைய வேண்டிய பண்பு நிறைந்த படம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

நடிகர்கள்: என். டி. ராமராவ், வி. நாகையா, டி. எஸ். பாலையா, பி. எஸ். வீரப்பா

நடிகைகள்: சௌகார் ஜானகி, பி. கண்ணம்பா, கிரிஜா, மோகன



ராஜ சேவை

பின்னணி: திருச்சிலோகநாதன், ஏ. எல்.ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி லீலா, எஸ். ஜானகி.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, சரோஜாதேவி நடித்த

நாடோடி மன்னன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜங்கிள் ட்ரம்ஸ் ஆப் ஆபிரிக்கா

இங்கிலேயர் மூர் நடித்தது.

மாலை 3-30, 6-30 இரவு 9-30 மணிக்கும்

# "பங்கீட்டரிசி கிடைக்காததால் யாழ்ப்பாணத்தில் கவலை"

## இரு அமைச்சுகள் அறிக்கை

### மறியல் இயக்கப் பற்றி விளக்கம்

கொழும்பு, புதன்

"யாழ்ப்பாணத்தில் வாழும் சிங்களவர்களின் புள்ளி விபரங்களையும் அவர்கள் அச்சத்துடன் வாழ்கிருர்களா வென்ற விபரத்தையும் அரசாங்க அதிபரின் உத்தரவின் மீது இராணுவத்தினர் சேகரித்துவருவதாக ஒரு ஆங்கிலப்பத்திரிகையில் வெளிவந்த செய்தி சரியல்ல" என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும் கலாசார உள்நாட்டு அமைச்சும் இன்று கூட்டாக வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளன. அந்த அறிக்கை சத்தியாக்கிரக நிலைமை பற்றி மேலும் பின்வருமாறு கூறுகிறது:-

யாழ்ப்பாணத்தில் பொதுவாக நிலைமையில் மாற்றம் எதுவும் இல்லை. மாநகரசபையின் பத்தாம் வட்டார மக்கள் நகர மேயர் தலைமையில் இன்று காலை சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். பங்கீட்டரிசி கிடைக்காததுபற்றிக் கவலை ஏற்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களைச் சந்தித்துப் பங்கீட்டரிசி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்திய மேயர், பங்கீட்டரிசி சம்பந்தமாக உணவு மந்திரியைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒரு தூது கோஷ்டியை அழைத்துச் செல்லப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிருர்.

மட்டக்களப்பில் நிலைமை அமைதியாகவே உள்ளது. மறியலில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகையில் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டுள்ளது. கச்சேரி உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்வேலை இன்று ஆரம்பமானது.

திருக்கோணமலையிலும் நிலைமை அமைதியாகவே உள்ளது. கச்சேரியில் மட்டும்தான் மறியல் நடைபெறுகிறது.

#### மன்னுரில் தொகை குறைவு

மன்னுரில் மறியல் செய்பவர்களின் தொகை கணிசமான அளவு குறைந்துள்ளது. ஊர்வலங்களில் பாடசாலைப் பிள்ளைகள் அழைத்துச் செல்லப்படுகிருர்கள்.

வவுனியாக் கச்சேரி வாசல்களிலும் தமிழ்ப்பகுதிக் காரியாதிகாரியின் வாசல்களிலும் மறியல் நடைபெறுகிறது. மறியல் செய்பவர்களின் மொத்தத்தொகை சுமார் 75. மறியல் இயக்கத்தை அப்பகுதி எம். பி. ஒழுங்கு செய்துள்ளார். இந்த இயக்கத்தைத் தீவிரப் படுத்துவதற்கு தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் வவுனியாவுக்கு வந்துசேர்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பு, மன்னுர், திருக்கோணமலை, வவுனியா ஆகிய இடங்களின் கச்சேரி உத்தியோகத்தர்களும் மறியல் செய்யப்படும் இதர காரியாலயங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் வேலைக்கு வந்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் கச்சேரி உத்தியோகத்தர்கள் மட்டும் வேலைக்கு வரவில்லை. மட்டக்களப்பு, திருக்கோணமலை, மன்னுர், வவுனியா ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சமாஜங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உத்தரவாதம்பெற்ற வியாபாரிகள் மூலமாகப் பங்கீட்டரி வழங்கப்பட்டது.

## உரிமைப் போரில்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

அபேட்சகராகப் போட்டியிட்டு முதலாவது எம். பி. யாக பெருந்தொகையான வாக்குகளால் வெற்றிபெற்ருர்.

இன்று காலையிலிருந்து திருக்கோணமலைக் கச்சேரி வாசல்களில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்த திரு. ஏகாம்பரம் வீட்டுக்குப்போய்த் திரும்புவதாக தனது நண்பர்களிடம் கூறிவிட்டு வீட்டுக்குச் சென்ருர். அவர் திரும்பிவரவில்லை. திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு அவர் காலமானர்.

திருக்கோணமலைக் கச்சேரிக்கு முன் மறியல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தன்று பொலிசார் தடியடிப் பிரயோகத்தில் திரு. ஏகாம்பரம் காயமடைந்தார்.

'காயமடைந்தது என்ற செய்தி உண்மையல்ல' என்று திரு. வி. பி. டி' சில்வா ஒரு அறிக்கையில் குறிப்பிட்டதை மறுத்து "காயமடைந்தது உண்மை ஆனல் அது எனக்கு வீரத்தழும்பு" என்று திரு. ஏகாம்பரம் பதிலளித்தார்.

#### நகரமண்டபத்தில் சடலம்

காலஞ்சென்ற திரு. ஏகாம்பரத்தின் சடலம் திருக்கோணமலை நகர மண்டபத்தில் பொது மக்கள் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்து முகமாக வைக்கப்பட்டுள்ளது. நாளை ஈமக்கிரியைகள் நடைபெறும்.

#### கந்தளாயில் தகனக்கிரியை

நாளை வியாழக்கிழமை காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை திருக்கோணமலை நகர மண்டபத்தில் பொதுமக்கள் தங்கள் கடைசி மரியாதையைச் செலுத்துமுகமாக திரு. ஏகாம்பரத்தின் சடலம் வைக்கப்படும். இதன்பின் கந்தளாய் மயானத்துக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும்.

முன் செய்த ஏற்பாட்டின்படி இன்று மாணவர் மன்றத்தினர் கச்சேரிமுன் மறியல் செய்வர். திரு. ஏகாம்பரத்தின் மறைவுக்கு அனுதாபந் தெரிவிக்கும் முகமாக சத்தியாக்கிரகிகள் இன்றுமட்டும் ஒரு நாள் உண்ணவிரதம் அனுஷ்டிப்பார்கள்.

## மீண்டும் கொந்தளிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் நடைபெற்றபின் தோட்டத்தின் நிலைமை பீதியை உண்டாக்கும் வகையில் இருந்தது. இதனல் கைகலப்பு நடைபெற்ற கல்பொடை டிவிஷனிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் உடமைகளை எடுத்துக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியேறியுள்ளனர். கலவரம் சம்பந்தமாக ஏழுபேர் கைது செய்யப்பட்டு போலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். ஆயுதப் போலிசார் தோட்டத்தில் ரோந்து சுற்றுகின்றனர். இ. தொ. காங்கிரஸ் நாவலப்பிட்டி ஜில்லாக் கமிட்டி இச்சம்பவம் பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், கம்பளை ஏ. எஸ். பி. ஆகியோருக்கு தகவல் கொடுத்திருக்கிறது.

## தொண்டர்களுக்கு உணவு

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை குருமார் சபையார் நேற்று இரவு கச்சேரிமுன் சத்தியாக்கிரகம் செய்யும் தொண்டர்களுக்கு உணவு அளித்தனர்.

இச்சபையிலிருந்து சில அங்கத்தவர்கள் இம்மாத இறுதியில் மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வார்கள்.

## நகரமேயர் தலைமையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் பெண் தொண்டர்கள் மறியல் செய்தனர்.

வெயிலின் கொடுமையிலிருந்து தங்களை ஓரளவுக்குப் பாதுகாத்துக்கொள்ளும்நோக்கத்துடன் சில இடங்களில் சத்தியாக்கிரகிகள் சாக்கு, ஓலை முதலியவைகளின் உதவியைத் தற்காலிகமாக நாடியுள்ளனர்.

நேற்றைய மறியல் இயக்கத்தில் கலந்துகொண்ட தொண்டர்களுக்கு கோப்பாய்க் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் உணவு வழங்கினர்.

#### புத்தளத்திலிருந்து ஒரு கோஷ்டி

புத்தளத்திலிருந்து முஸ்லிம் மக்கள் சிலரைக்கொண்ட ஒரு தூதுகோஷ்டி தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை நேற்றுச் சந்தித்து தாங்கள் எவ்விதத்தில் உதவிபுரியலாமெனக் கேட்டனர்.

#### மேயர் தலைமையில் ஊர்வலம்

புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் பத்தாம் வட்டார மக்கள் ஊர்வலமாகக் கச்சேரிக்குச் சென்று அங்கு சத்தியாக்கிரகம் செய்பவர்களுக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்தபின்னர் தாங்களும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். பத்தாம் வட்டார அங்கத்தவரும் யாழ்ப்பாண மேயருமான திரு. ரி. எஸ். துரைராஜாவின் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

ஊர்வலத்தில் பக்திப்பாடல்களைப் பாடிச் செல்லும் பஜனைக் கோஷ்டியினரும் சேர்ந்து கொண்டனர்.

ஊர்வலம் கச்சேரியை அணுகியதும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கமும், பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினமும் ஊர்வலத்திற் கலந்து கொண்டவர்களை எதிர்கொண்டழைத்தனர். தமிழரசுக்கட்சிக்குப் பணமுடிப்பொன்றும் வழங்கப் பெற்றது.

மிகப் பெரிய போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குப் பணச் செலவை ஏற்படுத்த விரும்பாத காரணத்தால் இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்தவர்கள் அதில் பங்குபற்றியவர்களுக்குத் தேவையான குளிர்பானங்களைத் தாங்களே கொண்டுவந்திருந்தனர். எனினும் தமிழ் மொழிப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடாத்தும் பெரியார்களும விட்டுக்கொடுக்காது அவ்வப்போது குளிர்பானங்களைத் தொண்டர்களுக்கு விநியோகித்தனர்.

நேற்று வவனியாவில் ஆரம்பமான மறியல் இயக்கத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசித்தம்பரமும் வவனியாவுக்குப் பிரயாணமானர்கள்.

மன்னுரில் மறியல் இயக்க அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்த கிளிநொச்சி எம். பி. திரு. சிவசுந்தரம் திருக்கோணமலைக்குச் செல்கிருர். அட்வகேட் கதிரவேற்பிள்ளை விரைவில் மன்னுருக்குப் பிரயாணமாவார்.

வவனியாவில்

## ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அமைதியாக சத்தியாக்கிரகம்

தண்ணிருற்று புதன்

வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் தலைமையில் இன்று வவனியாவில் மிக அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

வவனியா கச்சேரி, தமிழ் காரியாதிகாரி காரியாலயம் ஆகிய இடங்களில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. வவனியா பட்டின சபைத்தலைவர், வவனியா தமிழரசுக்கட்சி கிளைபிரமுகர்கள் ஆகியவர்கள் சத்தியாக்கிரகம்செய்கிருர்கள்.

சத்தியாக்கிரகிகளுக்கு அரசாங்க கண்டிராக்டர் திரு. கதிரேசு உணவு விநியோகம் செய்தார்.

## மக்களுக்காக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைப்பே அவரது அகால மரணத்துக்குக் காரணம்.

உண்மையில் அவர் தனது மக்களுக்காகத் தனது உயிரையும் தியாகம் செய்துவிட்டார். அவரை இழந்து தவிக்கும் அன்னரது குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

#### அமிர்தலிங்கம் அனுதாபம்

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் துக்கம் தொண்டையை அடைக்கப் பின்வருமாறு கூறினர்:-

போர்முனையில் நிற்கும் பொழுதே கடமையுணர்ச்சியுள்ள ஒரு வீரனை கடவுள் எம்மிடையேயிருந்து பறித்து விட்டார். இறப்பதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பு கூட சத்தியாக்கிரகிகளுடன் தமது கடமையையாற்றிச் சென்ற திரு. ஏகாம்பரம் எமக்கெல்லாம் வழிகாட்டும் கர்ம வீரனக விளங்கினர். அவருடைய குடும்பத்தினருக்கு ஒவ்வொரு தமிழ் மகனதும் இதய பூர்வமான அனுதாபங் கிடைக்கும்.

#### திரு. வி. ஏ. கந்தையா

"அடக்க ஒடுக்கமுள்ள தங்கமான மனுஷனை இழந்துவிட்டோம்."


**யாழ்ப்பாண மலையாளப் புகையிலை ஐக்கிய விற்பனவுச் சங்கம்**

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 30-ம் திகதிக்குமுன் அங்கத்தவர்களிடமிருந்து புகையிலை பெற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிருேம்.

சங்கத்துக்குப் புகையிலை கொடுக்க விரும்புபவர்கள் உடனே மனேஜருடன் இதுபற்றி ஆலோசிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**ஆர். ஸி. எஸ்.குக்,**
தலைவர்,
**யாழ்ப்பாண மலையாளப் புகையிலை ஐக்கிய விற்பனவுச் சங்கம், ரெக்கிள மேஷன் வீதி, யாழ்ப்பாணம்.**

Advt-72




ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கொச்சர் வீதி. : : கொழும்பு.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.